**கவனிக்க.**-*2024.05.31 ஆந் திகதிய இல. 2387 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I : தொகுதி I மற்றும் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2388 - 2024 ජූනි මස 07 වැනි සිකුරාදා - 2024.06.07

*2388 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*


(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 1386 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1394 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 1387 | ஏல விற்பனைகள் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 1392 | நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, யூன் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, யூன் மாதம் 14 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கைப் புகையிரத சேவைகள்

விலைமனுக்களுக்கான அழைப்பு

### PROCUREMENT FOR THE SUPPLY OF 200,000 Nos. RUBBER PADS TO SUIT 80 LBS CONCRETE SLEEPERS
### PROCUREMENT NO.: SRS F.8002

01. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் அடிப்படையில் 80 இறாத்தல் நிறையுடைய கொன்கிறீட் சிலிப்பர்களுக்கு பொருந்தக்கூடிய 200,000 எண்ணிக்கையான இறப்பர் பேட்டுக்களை (Rubber Pads) கொள்வனவு செய்வதற்காக உள்ளூர் உற்பத்தியாளர்களிடமிருந்து இலங்கை புகையிரத சேவைகளின் திணைக்கள பெறுகைக்குழுத் (மேல் மாவட்டம்) தலைவர் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பெற்றுக்கொள்வார்.

02. 2024.06.20 ஆந் திகதி பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்கள் மூடப்படும்.

03. 13,950.00 ரூபா பதின்மூவாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பது ரூபாவை மாத்திரம் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாகச் செலுத்திய பின்னர், 2024.06.19 ஆந் திகதி பி.ப. 3.00 மணி வரையும் கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, இலங்கை புகையிரத சேவைகள் பெறுகைக்கான பிரதி பொது முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய படிவங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

04. பெறுகைக்கான பிரதி பொது முகாமையாளரின் அலுவலகத்தில் விலைமனுக்கள் அவைகளை மூடியவுடன் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளை சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

05. விலைமனுக்கோரல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டவாறான 600,000 ரூபா ( ஆறு இலட்சம் ரூபா) பெறுமதியான விலைமனுப் பிணையொன்று விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

06. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் ஒன்றில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாகவே ஒப்படைக்கப்படலாம்.

தலைவர்,
திணைக்கள பெறுகைக்குழு ( மேல் மட்டம்),
பிரதிப் பொது முகாமையாளரின் அலுவலகம்(பெறுகை),
இலங்கை புகையிரத சேவைகள்,
பிரதிப் பொது முகாமையாளரின் ( பெறுகை) அலுவலகம்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10.

07. இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, இலங்கை புகையிரத சேவைகள், பெறுகைக்கான பிரதி பொது முகாமையாளரின் அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிக்கப்படுமென்பதுடன், மேலதிக விபரங்களுக்கு, தயவு செய்து பின்வரும் வழிகளில் தொடர்புகொள்ளவும்.

தொலைபேசி இலக்கங்கள்: 94(11)2438078 / 94(11) 2436818.
தொலைநகல் இலக்கம்: 94(11) 2432044
மின்னஞ்சல் : srs.slr@gmail.com./ tender2@railaway.gov.lk
இணையத்தளம்: www.railway.gov.lk

தலைவர்,
திணைக்களத்தின் பெறுகைக் குழு ( மேல் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

குறியீட்டு இல.: SRS/ F/ 8002.

06- 18

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## நீதிவான் நீதிமன்றம்- அக்கரைப்பற்று

அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்டுள்ள சான்றுப் பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை - 2024

அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும், உரிமை கோரப்படாததுமான கீழ்க் குறிப்பிடப்படும் பொருட்கள் 2024.06.15 ஆந் திகதியன்று காலை 9.00 மணிக்கு இந் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

1. இப் பொருட்களுக்காக உரிமை கோருபவர்கள் எவரும் இருப்பின் ஏல விற்பனை தொடங்குவதற்கு முன்னர் தங்களது உரிமைக் கோரிக்கையை முன்வைக்க வேண்டும்.

2. பொருட்களை மன்றின் பதிவாளரின் அனுமதியுடன் ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு 1/2 மணித்தியாலத்திற்கு முன்பதாக பார்வையிடலாம்.

3. பகிரங்க ஏல விற்பனையின் போது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள பொருட்களுக்குரிய விலை கிடைக்கப்பெறாதவிடத்து ஏல விற்பனையிலிருந்து மீளப் பெறும் உரிமையை மன்று தன்னகத்தே வைத்திருக்கும்.

4. விற்பனை செய்யப்பட்ட பொருட்களுக்கான பணத்தை உடன் செலுத்தி உடனடியாகவே நீதிமன்ற வளாகத்திலிருந்து அகற்ற வேண்டும்.

5. எல்லாக் கொடுப்பனவுகளும் காசாகவே செலுத்தப்படல் வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

6. பொருட்களை கொள்வனவு செய்வோர் தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்த தேசிய அடையாள அட்டையைக் கொண்டு வர வேண்டும்.

A.C. ரிஸ்வான்,
நீதிவான்.

நீதிவான் நீதிமன்றம்,
அக்கரைப்பற்று.

**சான்றுப் பொருட்களின் விபரம்**

| தொ.இல. | வழக்கு இலக்கம் | சான்றுப் பொருட்கள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | 63518/Pc/22 | EP BAD 6565 மோட்டார் சைக்கிள் | 01 |
| 02 | இலக்கம் இல்லை | கையுழவு இயந்திரம் | 02 |
| 03 | இலக்கம் இல்லை | மோட்டார் சைக்கிள் | 01 |
| 04 | இலக்கம் இல்லை | மோட்டார் சைக்கிள் EP JU 3664 | 01 |
| 05 | இலக்கம் இல்லை | Hunk மோட்டார் சைக்கிள | 01 |
| 06 | இலக்கம் இல்லை | TVS மோட்டார் சைக்கிள | 01 |
| 07 | இலக்கம் இல்லை | pulsar மோட்டார் சைக்கிள் | 01<br>01 |
| 08 | இலக்கம் இல்லை | CD Dawn மோட்டார் சைக்கிள் | 01 |

| தொ.இல. | வழக்கு இலக்கம் | சான்றுப் பொருட்கள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 09 | AR/ 2577/23 | EP/ TD 5289 மோட்டார் சைக்கிள் | 01 |
| 10 | AR/ 2577/23 | EP/ MN 7058 மோட்டார் சைக்கிள் | 01 |
| 11 | AR/ 2577/23 | WP/VL 0849 மோட்டார் சைக்கிள் | 01 |
| 12 | AR/ 2577/23 | NW/ TV 0096 மோட்டார் சைக்கிள் | 01 |
| 13 | 63711/PC | UP/DAG 1214 bolero இன வாகனம் | 01 |

06- 07

---

**நீதிவான் நீதிமன்றம் - திருகோணமலை**
**வழக்குச் சான்றுப் பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை - 2024.06.29.**

திருகோணமலை நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும், உரிமை கோரப்படாததுமான கீழே குறிப்பிடப்படும் வழக்குச் சான்றுப் பொருட்கள் 2024.06.29 ஆந் திகதியன்று காலை 9.00 மணிக்கு இந் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

1. இவ் வழக்குச் சான்றுப் பொருட்கள் தொடர்பில் உரிமை கோருபவர்கள் எவருமிருந்தால் ( ஏல விற்பனை ஆரம்பிப்பதற்கு முன்னர் தங்களது உரிமைக் கோரிக்கைகளை முன் வைத்தல் வேண்டும்).

2. பொது மக்கள் எவரும் இந் நீதிமன்ற பதிவாளரின் அனுமதியுடன் குறிப்பிட்ட வழக்குச் சான்றுப் பொருட்களை ஏல விற்பனை தொடங்குவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்னர் பார்வையிடலாம்.

3. இவ் வழக்குச் சான்றுப் பொருட்கள் தொடர்பில் விலைகள் ஒவ்வாத பட்சத்தில் ஏல விற்பனையிலிருந்து குறித்த பொருட்கள் மீளப் பெறுவதற்கு இந் நீதிமன்றத்திற்கு உரிமை உண்டு.

4.வழக்குச் சான்றுப் பொருட்களை கொள்வனவு செய்பவர்கள் உடனடியாக பணத்தினை செலுத்தி அதனை நீதிமன்ற வளாகத்திலிருந்து அப்புறப்படுத்தல் வேண்டும், காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

5. வழக்குச் சான்றுப் பொருட்களை விலை கோரி வாங்குபவர்கள் தமது அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்கு தேசிய அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும்.

இ. பயஸ் றெஸ்ஸாக்,
நீதிவான் .

நீதிவான் நீதிமன்றம்,
திருகோணமலை,
2024, மே 29.

**உரிமை கோரப்படாத தங்க நகைகள்**

| இல. | வழக்கிலக்கம் | சான்றுப் பொருள் இல. | பொருட்கள் | தரம் | நிறை | நிகர நிறை |
|---|---|---|---|---|---|---|
| 1. | BR/5765/00 | PR/16/00 | நெக்லஸ் | 20 | 12.3 g | - |
| 2. | BR/4466/99 | PR/119/99 | சிமிக்கி-2<br>தோடு-1 சோடி<br>மோதிரம் - 01 | 19 | 7.6 g | - |

| இல. | வழக்கிலக்கம் | சான்றுப் பொருள் இல. | பொருட்கள் | தரம் | நிறை | நிகர நிறை |
|---|---|---|---|---|---|---|
| 3. | BR/1073/02 | PR/164/02 | 02 காப்பு | 12 | 15.7g | - |
| 4. | BR/1999/03 | PR/189/03 | செயின் | 22 | 4.1 g | - |
| 5. | AR/1275/03 | PR/148/03 | செயின் -01<br>முத்து செயின்-01 | 21<br>20 | 5.5 g<br>17.6 g | 10G |
| 6. | MC/7786/94 | PR/37/94 | மோதிரம் | 20 | 1.8g | - |
| 7. | AR/1275/03 | PR/143/03 | செயின் | 22 | 15.3 g | - |
| 8. | BR/5687/00 | PR/162/00 | கல் வைத்த -2 | 16 | 2.8 g | 2.4g |
| 9. | MC/18920/99 | PR/148/99 | உருக்கிய தங்கம் | 16 | 12.3 g | |
| 10. | BR/6269/00 | PR/143/00 | அறுந்த செயின் | 20 | 2.9 g | |
| 11. | BR/771/01 | PR/162/01 | மோதிரம் -01 | 18 | 2.2 g | |
| 12. | MC/12036/03 | PR/69/02 | அறுந்த செயின் | 22 | 4.3 g | |
| 13. | AR/1368/03 | PR/67/03 | மோதிரம் -01<br>தோடு-01<br>மூக்குத்தி-01 | 16 | 2.5 g | 1.5g |
| 14. | AR/573/10 | PR/14/10 | கைசெயின் | 18 | 4.7 g | - |
| 15. | MC/12521/01 | PR/ | பென்டன் | 20 | 0.8 g | |
| 16. | MC/1272/91 | PR/199/90 | ஜிப்சி -1 சோடி | 16 | 1.2 g | |
| 17. | MC/23768/01 | PR/57/00 | அறுந்த செயின் | 20 | 0.6 g | |
| 18. | MC/11387/99 | PR/86/99 | பேபி மோதிரம் -02 | 18 | 1.8 g | |
| 19. | BR/5765/00 | PR/93/00 | பென்டன் | 16 | 1 g | |
| 20. | MC/15825/98 | PR/107/97 | உடைந்த பென்டன் | 16 | 0.4 g | |
| 21. | MC/9236/99 | PR/17/98 | அறுந்த செயின் | 16 | 1.6 g | |
| 22. | AR/113/ | PR/07 | மோதிரம் | 20 | 3.4 g | - |
| 23. | BR/771/01 | PR/163/01 | மோதிரம் | 18 | 1.2 g | |
| 24. | MC/3667/94 | PR/ | பென்டன் | 18 | 2.2 g | |
| 25. | MC/13975/87 | PR/131/ | பேபி மோதிரம் | 18 | 0.4 g | |
| 26. | MC/13362/86 | PR/ | ஜிப்சி -01 சோடி | 16 | 2.1 g | |
| 27. | | PR/21/01 | பேபி ஜிப்சி -01 சோடி | 16 | 0.7 g | |
| 28. | | PR/12/94 | தோடு -01 சோடி | 10 | 0.4 g | |
| 29. | | PR/123/08 | உருக்கிய தங்கம்<br>உடைந்த காப்புத் துண்டு | 16 | 22.7 g<br>1.4 g | |
| 30. | AR/940/07 | PR/162/07 | கல்பதித்த கை செயின் | 20 | 3.7 g | 3 G |
| 31. | AR/1279/07 | PR/48/07 | கைசெயின் | 20 | 10.3 g | - |
| 32. | AR/1895/04 | PR/109/04 | பென்டன்<br>செயின்-2<br>மோதிரம்-2 | 21 | 15.75 g | - |

| இல. | வழக்கிலக்கம் | சான்றுப் பொருள் இல. | பொருட்கள் | தரம் | நிறை | நிகர நிறை |
|---|---|---|---|---|---|---|
| 33. | AR/998/19 | PR/195/19 | தோடுகள் - 1 சோடி<br>பேபி மோதிரம்-2 | 10 | 1.2 g | - |
| 34. | AR/3987/09 | - | அறுந்த செயின் | 16 | 1 g | - |

06- 20

---

**நீதிவான் நீதிமன்றம் - திருகோணமலை**

**வழக்குச் சான்றுப் பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை - 2024.06.29.**

திருகோணமலை நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும், உரிமை கோரப்படாததுமான கீழ்க் குறிப்பிடப்படும் வழக்குச் சான்றுப் பொருட்கள் 2024.06.29 ஆந் திகதியன்று காலை 9.00 மணிக்கு இந் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

1. இவ் வழக்குச் சான்றுப் பொருட்கள் தொடர்பில் உரிமை கோருபவர்கள் எவருமிருந்தால் ( ஏல விற்பனை ஆரம்பிப்பதற்கு முன்னர் தங்களது உரிமைக் கோரிக்கைகளை முன் வைத்தல் வேண்டும்.).

2. பொது மக்கள் எவரும் இந் நீதிமன்ற பதிவாளரின் அனுமதியுடன் குறிப்பிட்ட வழக்குச் சான்றுப் பொருட்களை ஏல விற்பனை தொடங்குவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்னர் பார்வையிடலாம்.

3. இவ் வழக்குச் சான்றுப் பொருட்கள் தொடர்பில் விலைகள் ஒவ்வாத பட்சத்தில் ஏல விற்பனையிலிருந்து குறித்த பொருட்கள் மீளப் பெறுவதற்கு இந் நீதிமன்றத்திற்கு உரிமை உண்டு.

4. வழக்குச் சான்றுப் பொருட்களை கொள்வனவு செய்பவர்கள் உடனடியாக பணத்தினை செலுத்தி அதனை நீதிமன்ற வளாகத்திலிருந்து அப்புறப்படுத்தல் வேண்டும், காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

5. வழக்குச் சான்றுப் பொருட்களை விலை கோரி வாங்குபவர்கள் தமது ஆளடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்கு தேசிய ஆளடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும்.

6. மணல் ஏல விற்பனையின் போது மணலினை பெற்றுக் கொள்ளும் உரிமையாளர்கள் அன்றைய தினம் (பெக்கோ) இயந்திரங்களை கொண்டு உடனடியாக மணலினை அவ்விடத்திலிருந்து அகற்றுவற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

இ. பயஸ் றெஸ்ஸாக்,
நீதிவான் .

நீதிவான் நீதிமன்றம்,
திருகோணமலை,
2024, மே 27.

**சான்றுப் பொருட்கள் விபரம்**

**(உரிமை கோரப்படாத மீன்பிடி உபரகணங்கள்)**

| தொ.இல. | வழக்கு இலக்கம் | பொருட்கள் விபரம் |
|---|---|---|
| 1. | இனங்காணப்படவில்லை | மீன்பிடி உபகரணம்<br>(வலைத்துண்டுகள், மிதவைகள், கயிறு) |

| தொ.இல. | வழக்கு இலக்கம் | பொருட்கள் விபரம் |
|---|---|---|
| 2. | இனங்காணப்படவில்லை | மீன்பிடிக்க மேலதிகமாக பயன்படுத்தப்படும் ஈயம் |
| 3. | இனங்காணப்படவில்லை | மீன்பிடி கண்ணாடிப் படகு |
| 4. | இனங்காணப்படவில்லை | மீன்பிடி கண்ணாடிப் படகு |
| 5. | இனங்காணப்படவில்லை | மீன்பிடி கண்ணாடிப் படகு |
| 6. | இனங்காணப்படவில்லை | கண்ணாடியிழை படகு |
| 7. | இனங்காணப்படவில்லை | கண்ணாடியிழை படகு |
| 8. | இனங்காணப்படவில்லை | கண்ணாடியிழை படகு |
| 9. | இனங்காணப்படவில்லை | கண்ணாடியிழை படகு |
| 10. | இனங்காணப்படவில்லை | கண்ணாடியிழை படகு |
| 11. | இனங்காணப்படவில்லை | கண்ணாடியிழை படகு |
| 12. | இனங்காணப்படவில்லை | கண்ணாடியிழை படகு |
| 13. | இனங்காணப்படவில்லை | கண்ணாடியிழை படகு |
| 14. | இனங்காணப்படவில்லை | OBM இயந்திரம் |
| 15. | இனங்காணப்படவில்லை | OBM இயந்திரம் |
| 16. | இனங்காணப்படவில்லை | உள்விசை இயந்திரம் |
| 17. | இனங்காணப்படவில்லை | உள்விசை இயந்திரம் |
| 18. | MC/2132/2012 | OBM இயந்திரம் |
| 19. | MC/511/02/21 | OBM இயந்திரம் |
| 20. | இனங்காணப்படவில்லை | OBM இயந்திரம் |
| 21. | இனங்காணப்படவில்லை | கண்ணாடியிழை ப்லோ |
| 22. | இனங்காணப்படவில்லை | கண்ணாடியிழை ப்லோ |
| 23. | இனங்காணப்படவில்லை | கண்ணாடியிழை படகு |

**சான்றுப் பொருட்கள் விபரம் ( முச்சக்கர வண்டி)**

| S. No. | Case Number | Three Wheeler Number |
|---|---|---|
| 1. | MC/4256/21 | YY-2197 |

**சான்றுப் பொருட்கள் விபரம் ( ஆற்று மண்)**

| S. No. | Details | Qube |
|---|---|---|
| 01. | ஆற்று மண் ( திருகோணமலை நீதிவான் நீதிமன்றம்) | 27 |

06-19

# ஆய விற்பனையும் குத்தகையும்

## நாரம்மல பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை - 2025

2025, சனவரி 01 ஆந் திகதி தொடக்கம் 2025, திசெம்பர் 31ஆந் திகதி வரையிலான காலத்தில் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணையை சில்லறைக்கு கள்ளு விற்கும் பூரண அதிகாரத்தை வழங்குவதற்கு 1982 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 207 ஆம் இலக்க வர்த்தமானியில் உரிய ஆணையாளரினால் விளம்பரப்படுத்தப்பட்ட சில்லறைக்கு கள்ளு விற்கும் சட்டங்களுக்கமைய 2024, ஆவணி 22ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை நாரம்மல பிரதேச செயலாளரினால் கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கள்ளு குத்தகை வாங்க முன்வருபவர் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய கேள்விப்பத்திரத்தை முறையே பூர்த்தி செய்து அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் வைப்புப் பணத்தை இவ்வலுவலகத்திலோ பிரதேச செயலகத்திலோ செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை மேல் குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தலின்படி கள்ளு விற்கும் சட்டங்களுக்கமைய பெற்றுக்கொண்ட பெறுமதிச் சான்றிதழை காகித உறையிலிட்டு முத்திரை ஒட்டி கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தான் விலைகோரும் தவறணையின் பெயரையும் இலக்கத்தையும் தெளிவாகக் குறிப்பிட்டு அட்டவணையில் குறிப்பிட்டுள்ள இறுதி நேரத்திற்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்பவோ அல்லது இப்பிரதேச செயலகத்தில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியில் இடுவதன் மூலமாகவோ பிரதேச செயலாளருக்கு கிடைக்க வழி வகுக்கலாம்.

3. கேள்விப்பத்திரம் நிரப்பும்போது உண்டாகும் சகல திருத்தங்களும் கேள்வியாளரினால் கையொப்பமிட்டு அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும் . அவ்வாறில்லாத கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

4. கேள்விப்பத்திரம் ஏற்கப்படும் கடைசித் திகதியான 2024, ஆவணி 22 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு சகல கேள்வியாளர்களும் பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

5. எதுவித ஆட்சேபனையுமின்றி ஒரு கேள்விப்பத்திரத்தையோ எல்லா கேள்விப்பத்திரங்களையுமோ நிராகரிக்கும் உரிமை நாரம்மல பிரதேச செயலாளருக்கு உரியதாகும்.

6. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டவர் என விளம்பரப்படுத்திய பிறகு அதற்குரித்தானவர் அன்றைய தினம் பி.ப. 3.00 மணிக்கு முன் நாரம்மல பிரதேச செயலாளர் கூறும் தொகையை வைப்புப் பணமாகச் செலுத்தி வியாபார நியதிகளுக்கு கைச்சாத்திட வேண்டும்.

7. 2025 ஆம் ஆண்டுக்காக தற்போது கள்ளுத் தவறணை உள்ள இடங்கள் தரப்படும் என உறுதி அளிக்கப்படமாட்டாது. தற்போதைய நிலையங்கள் 2025 ஆம் ஆண்டுக்காக பெற்றுக்கொள்ளப்படாவிடின் அதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையம் தகுந்தது என கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் நாரம்மல பிரதேச செயலாளரின் அனுமதியை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

8. 2024.08.22 ஆந் திகதி தகுந்த ஆய விற்பனைக்கு தகுந்த கேள்வி இல்லாதவிடத்து 2024.09.19ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மறு ஆய விற்பனை இதே இடத்தில் நடைபெறும்.

9. மேலதிக விபரங்களை இப்பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

எம்.ஆர்.எம். இம்ரான்,
பிரதேச செயலாளர்,
நாரம்மல.

பிரதேச செயலகம்,
நாரம்மல,
2024, மே 22.

**அட்டவணை**

| தொடர் இல. | பகுதி | கேள்விப்பத்திரம் ஏற்கப்படும் கடைசித் திகதியும் நேரமும் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா | தவறணை திறந்திருக்கும் நேரம் |
|---|---|---|---|---|
| 1 | நாரம்மல | 2024.08.22<br>மு. ப. 10.30 | 1,000 .00 | மு.ப.11.00 மணி தொடக்கம் பி. ப. 2.00 மணி வரை<br>பி. ப. 5.00 மணி தொடக்கம் பி.ப. 8.00 மணி வரை |

06- 02

## திருகோணமலை மாவட்ட கள்ளுத்தவறணை குத்தகைக்கான விற்பனை - 2024/2025

*(2024, ஆடி 01 ஆந் திகதி தொடக்கம் 2025, ஆனி 30 ஆந் திகதி வரை )*

*1. 2024 ஆம் ஆண்டு ஆடி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து 2025, ஆனி மாதம் 30 ஆந் திகதி வரை கள்ளு சில்லறையாக விற்பதற்கான, 1982.08.20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத் தவறணை குத்தகையினை விற்பனை செய்வதற்கான நடைமுறைகளுக்கேற்ப, கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைக்கான விலைகோரல்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*2. அனைத்து விலைகோரல் படிவங்களும், திருகோணமலை பிரதேச செயலாளர் பணிமனையிலிருந்து பெற்று அவற்றைப் பூர்த்தி செய்வதுடன் கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்வி கோரல் வைப்புப் பணத்தினை வைப்புச் செய்தமையை உறுதிப்படுத்தும் முகமாக பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினையும், குறிப்பிட்ட விலை கோரலில் குறிப்பிடப்பட்டுள்ள விலை நிர்ணயத்திற்கு ஆகக் குறைந்தளவான 15% ஆன பெறுமதிச் சான்றிதழும் அதனோடு இணைத்தல் வேண்டும்.*

*3. உரியவாறு தயாரிக்கப்பட்ட அனைத்து விலைகோரல் பத்திரங்களும் அரக்கு முத்திரையிடப்பட்ட கடிதவுறையில் இடப்படல் வேண்டும். அக் கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் "............................... இலக்கமுடைய ............................ கள்ளுத்தவறணைக்கான விலைகோரல்" எனக் குறிப்பிடப்படுவதுடன், அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தவறணையின் பெயர், இலக்கம் ஆகியவற்றையும் குறிப்பிட்டு 2024.06.18 ஆந் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன்பு திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளருக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும் அல்லது அந் நேரத்திற்கு முன் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளரின் பணிமனையின் நிர்வாக உத்தியோகத்தரது அலுவலக அறையில் வைக்கப்பட்டிருக்கும் விலைகோரல் பெட்டியில் இடுதல் வேண்டும்.*

*4. விலை கோரலானது 1982.08.20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத் தவறணை குத்தகைக்கான விற்பனை நியமங்களுக்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.*

*5. 2024.06.18 ஆந் திகதி பி.ப. 2.30 மணி வரை விலைகோரல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் நேரம் முடிவடைந்தவுடனேயே விலைகோரல் பத்திரங்கள் திறக்கப்படும். அச் சந்தர்ப்பத்தில் அனைத்து கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் தரகர்கள் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பணிமனைக்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.*

*6. முன்வைக்கப்பட்ட விலை கோரல் படிவங்களுள் தெரிவு செய்யப்பட்ட திருப்திகரமான ஒப்பந்தக்காரரால் 02 மாதங்களுக்கு மேற்பட்ட வைப்புப் பணமும் ஒரு மாதத்திற்கான அனுமதிப்பத்திர கட்டணமும் கேள்விப்பத்திரம் திறக்கப்படும் குறித்த தினத்திலேயே செலுத்தப்படல் வேண்டும்.*

*7. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளுள் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்டவற்றையோ 2024.06.18ஆந் திகதி விற்பனை செய்வதற்காக 2024.06.20 ஆந் திகதி பி.ப.2.30 மணி வரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளுதல் முடிவடைந்தவுடனேயே கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். இதற்காக மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளும் உரித்தாகும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.*

*8. இது தொடர்பாக மேலதிக விபரங்களை திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பணிமனையில் பெற்றுக் கொள்ள முடியும்.*

பொ. தனேஸ்வரன்,
பிரதேச செயலாளர்,
திருகோணமலை பட்டினமும் சூழலும்.

பிரதேச செயலகம்,
திருகோணமலை பட்டினமும் சூழலும் ,
*2024,மே 22.*

**அட்டவணை**

| தொடர் இல. | பிரிவு | வலயப் பிரிவு | கள்ளுத் தவறணை திறக்கும் நேரம் | கள்ளுத் தவறணை மூடும் நேரம் | மீளளிக்கப்படும் விலைகோரல் வைப்புப் பணம் | மீளளிப்புச் செய்யப்படாத விலை கோரல் வைப்புப் பணம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | வட்டார இல. - 1 | வில்லூன்றி இல.-01 | மு.ப.11.00<br>பி.ப. 5.00 | பி.ப.2.00<br>பி.ப.8.00 | ரூபா 3,000.00 | ரூபா 1,000.00 |
| 2. | வட்டார இல. - 2 | தெக்கலூத்து இல.-03 | மு.ப.11.00<br>பி.ப. 5.00 | பி.ப.2.00<br>பி.ப.8.00 | ரூபா 1,500.00 | ரூபா 1,000.00 |

06-10

# உத்தியோகத்தொடர்பற்ற அறிவித்தல்கள்

**மாஸ் ஏசியா இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்**
**கம்பனியின் பதிவு இல.PV 00201557**

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 270(இ) ஆம் பிரிவு மற்றும் 272 ஆம் பிரிவு ஆகியவற்றின் கீழான கம்பனி கலைப்பு உத்தரவு பற்றிய அறிவித்தலின் கீழ்**

*கம்பனியின் பெயர்:* மாஸ் ஏசியா இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
*பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி:* இல. இல. 61/ 1, பிலியந்தல வீதி, கட்டுவாவள பொரெலெஸ்கமுவ,
தற்போது
இல. 62/ 31, ஜீ பீரிஸ் மாவத்தை, களுபோவில, தெஹிவளை
*நீதிமன்றம்:* வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)
*வழக்கு இல.:* CHC/ 63/2023/CO
*நீதிமன்ற கட்டளைத் திகதி:* 2024.04.05
*கோரிக்கை தாக்கல் செய்த திகதி:* 2023.08.11
*கம்பனி கலைப்பாளர் பெயர்:* G. J. David
*முகவரி:* C/o, SJMS Associates (Presently Deloitte Associates)
Lavel 3, No.11, Castle Lane, Colombo 4.

06- 32/1

---

**மாஸ் ஏசியா இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்**
**கம்பனியின் பதிவு இல.PV 00201557**

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 346(1) இன் கீழான கம்பனி கலைப்பாளர் நியமனம் பற்றிய அறிவித்தல்**

*கம்பனியின் பெயர்:* மாஸ் ஏசியா இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
*பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி:* இல.61/ 1, பிலியந்தல வீதி, கட்டுவாவள பொரெலெஸ்கமுவ,
தற்போது
இல. 62/ 31, ஜீ பீரிஸ் மாவத்தை, களுபோவில, தெஹிவளை
*நீதிமன்றம்:* வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)
*வழக்கு இல.:* CHC/ 63/2023/CO
*கம்பனி கலைப்பாளர் பெயர்:* G. J. David
*முகவரி:* C/o, SJMS Associates (Presently Deloitte Associates)
Lavel 3, No.11, Castle Lane, Colombo 4
*நியமனத் திகதி:* 2024.04.05

06- 32/2

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப் பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை - 2024**

| *மாதம்* | | *வெளியீட்டு நாள்* | | | *அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும்* | | |
|---|---|---|---|---|---|---|---|
| **யூன்** | .. | வெள்ளி | 07.06.2024 | .. | நண்பகல் 12 | புதன் | 22.05.2024 |
| | | வெள்ளி | 14.06.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.05.2024 |
| | | வியாழன் | 20.06.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.06.2024 |
| | | வெள்ளி | 28.06.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.06.2024 |
| **யூலை** | .. | வெள்ளி | 05.07.2024 | .. | நண்பகல் 12 | வியாழன் | 20.06.2024 |
| | | வெள்ளி | 12.07.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.06.2024 |
| | | வெள்ளி | 19.07.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.07.2024 |
| | | வெள்ளி | 26.07.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.07.2024 |
| **ஓகத்து** | .. | வெள்ளி | 02.08.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.07.2024 |
| | | வெள்ளி | 09.08.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.07.2024 |
| | | வெள்ளி | 16.08.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.08.2024 |
| | | வெள்ளி | 23.08.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.08.2024 |
| | | வெள்ளி | 30.08.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.08.2024 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.